செ. கு. எண்: 231 நாள் : 29.08.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 29.8.2013**

நாட்டிற்கு அந்நியச் செலாவணியை பெற்றுத் தருவதிலும், உள்நாட்டு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் ஜவுளித் தொழிலை மேற்கொண்டு வரும் நெசவாளர்களுக்கு 2013–2014 ஆம் நிதியாண்டில் 10,000 பசுமை வீடுகள் கட்டித் தரப்படும் என்று நான் ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்து இருந்தேன்.

இந்த உறுதிமொழியை செயல்படுத்தும் வகையில், இன்று (29.8.2013) தலைமைச் செயலகத்தில் எனது தலைமையில் ஓர் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. நத்தம் இரா. விசுவநாதன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. சி.வி. சங்கர், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு. பி. முத்துவீரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், பெரும்பாலான நெசவாளர்கள் தங்கள் இல்லங்களிலேயே தறிகளை வைத்து தொழில் புரிவதால், கூடுதலான பரப்பளவில் வீடுகள் கட்டித் தரப்படுவது அவசியம் என்றும், நெசவாளர்களைப் பொறுத்தவரையில் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்படும் 300 சதுர அடி பரப்பளவிலான வீடுகள் போதாது என்றும், தறிகளை வைத்து அவர்கள் இல்லங்களிலேயே தொழில் புரியும் வகையில், தறிக் கூடத்தின் மேற்கூரை உயரம் 10 அடியில் இருந்து 12.3 அடியாக உயர்த்தப்பட வேண்டும் என்றும், தறிக் கூடத்தின் நீளம் 12 அடியிலிருந்து 16 அடியாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், இதன் காரணமாக நெவாளர்களுக்கான வீடுகள் கட்டித் தர குறைந்தபட்சம் 365 சதுர அடி தேவை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

இது குறித்த விரிவான விவாதத்திற்குப் பிறகு, நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 365 சதுர அடி பரப்பளவில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, ஒவ்வொரு வீடும் 2.60 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டித் தரப்படும். கூடுதலாக 65 சதுர அடி பரப்பளவில் வீடுகள் கட்டிக் கொடுப்பதன் காரணமாக ஒவ்வொரு வீட்டிற்கு ஏற்படும் கூடுதல் செலவான 50,000 ரூபாயினை தமிழக அரசே ஏற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென கூடுதலாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இதன்மூலம், நெசவாளர்கள் தங்கள் இல்லங்களிலேயே இருந்து தங்கள் தொழிலை மேற்கொள்ள வழிவகுக்கும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9